மல்லிகைப் பூ விலை வீழ்ச்சி

First Published : 27 Apr 2011 02:08:10 AM IST



திருத்தணியை அடுத்துள்ள சந்திரஜெயபுரம் கிராமத்தில் மல்லிகைத் தோட்டத்தில் பூக்களை பறிக்கும் சிறுமி.

திருத்தணி, ஏப். 26: மல்லிகைப் பூவின் விலை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதால் மல்லிகைப் பூ பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர்.

திருத்தணியைச் சுற்றியுள்ள கிராமங்களான சத்திரஞ்ஜெயபுரம், தும்பிகுளம், கோபாலபுரம், தாழவேடு, அருங்குளம், பொன்பாடி, பெருங்களத்தூர், கீழாந்தூர், புதூர் உள்ளிட்ட 30- க்கும் மேற்பட்ட கிராமங்களில் மல்லிகைப் பூ பயிரிடப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் கூட 1 ஏக்கர் முதல் 2 ஏக்கர் நிலத்தில் மல்லிகைப் பூ பயிரிட்டுள்ளனர். மல்லிகைச் செடிகளில் பூக்கும் பூவை பறித்து விற்பனைக்குக் கொண்டுச் செல்ல போதுமான அளவு ஆட்கள் கிடைக்காததால் அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் மல்லிகைப் பூக்களை பறிக்க ஆட்களை வேலைக்கு வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சத்திரஞ்ஜெயபுரம் கிராம விவசாயி வேலாயுதம் கூறியது: மல்லிகைப் பயிரிட பரந்த நிலப்பரப்பும், வளமான மண்ணும் தேவை. அதிக நீர் தேவைப்படாது. வாரத்திற்கு இருமுறை மட்டும் நீர் பாய்ச்சினால் மட்டும் போதுமானது. தற்போது நான் 1 ஏக்கர் நிலத்தில் மல்லி, முல்லை பயிரிட்டுள்ளேன். இதற்கு டிஏபி கருப்பு பூச்சிக்கொல்லி மருந்து இட ரூ.1500 முதல் ரூ.2 ஆயிரம் வரை செலவாகிறது. மல்லிகைப் பூ மார்ச் மாதத்தில் பூக்கத் தொடங்கி டிசம்பர் மாதம் வரை

பூக்கின்றது. இப்பருவத்தில் மல்லிகைப் பூக்களை பறித்து திருத்தணி, அரக்கோணம், திருவள்ளூர், பூந்தமல்லி, சென்னை உள்ளிட்ட ஊர்களுக்கு எடுத்துச் சென்று மொத்த விலைக்கும், சில்லரை விலைக்கும் விற்பனை செய்து வருகிறோம்.

கடந்த ஆண்டு இதே ஏப்ரல் மாதத்தில் மல்லிகைப் பூ ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.110 வரை விற்பனையானது. ஆனால் தற்போது ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.21-க்கு விற்பனையாகிறது. மல்லிகைப் பூ விளைச்சல் அதிகமாக இருக்கும் போது விலையோ குறைந்து விடுகிறது.

முகூர்த்த நாள்களான டிசம்பர், ஜனவரி மாதத்தில் மட்டும் மல்லிகைப் பூ ஒரு கிலோ ரூ.100-க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. மற்ற மாதங்களில் விலை குறைவாக இருக்கும்.

ஆனால் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு நடப்பாண்டில் ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.21-க்கு விற்பதால் கடும் விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

**குறுவை சாகுபடி மேற்கொள்ள அனைத்து பணிகளும் தயார்**

First Published : 26 Apr 2011 12:44:16 PM IST

காரைக்கால், ஏப். 25: குறுவை சாகுபடி மேற்கொள்ள அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளன என காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் மதியழகன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

கடந்த ஆண்டு சம்பா பருவம் முடிந்து அறுவடையாவும் முடிக்கப்பட்டன. குறுவை, சம்பா மூலம் கடந்த ஆண்டு சுமார் 28 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

நிகழாண்டில் ஆழ்குழாய் கிணற்றுப் பாசனம் மூலம் காரைக்காலில் குறுவைப் பணி தொடங்கப்படவுள்ளது. இதற்காக, விவசாயிகள் தயாராகி விட்டனர். ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை குறுவைப் பணி சிறப்பாக மேற்கொள்ளப்படும். குறிப்பாக குறுவையில் டி.கே.9 மற்றும் ஏ.டி.டி. 43, 45 ஆகிய ரகங்கள் விதைக்கப்படும். விவசாயிகளுக்கு தரமான, உற்பத்தி அதிகம் தரக்கூடிய இந்த ரக விதைகள் அளிக்க வேளாண் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. வேளாண் துறையின் அங்கமான பாசிக் நிறுவனம் மூலம் விதை, உரம் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். விதை மட்டும் 36 டன் தேவையென பாசிக் நிறுவனத்திடம் தெரிவித்துள்ளது வேளாண் துறை. காரைக்கால் மாவட்டத்தில் அம்பகரத்தூர், திருநள்ளாறு, சுரக்குடி, நெடுங்காடு, விழுதியூர் உள்பட சுற்றுவட்டாரப் பகுதியில் சுமார் ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான ஆழ்குழாய் பாசனத்துக்கான உபகரணங்கள் குறைந்த வாடகையில் தருவதற்கும் வேளாண் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றார்.

**பழனியருகே மழை நீரில் மூழ்கி நெற்பயிர்கள் நாசம்**

First Published : 26 Apr 2011 11:40:58 AM IST

பழனி, ஏப். 25: பழனியை அடுத்த வில்வாதம்பட்டி பகுதியில் பெய்த திடீர் கோடை மழையால், சாகுபடிக்குத் தயாராக இருந்த பல லட்சம் ரூபாய் மதிப்பிலான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி நாசமாயின.

பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்து கோடைமழை பெய்து வருகிறது. இதனால், பல பகுதிகளிலும் குளங்கள், கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. மேலும், பழனியைச் சுற்றியுள்ள அணைகளுக்கும் நீர்வரத்து துவங்கியுள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பெய்த தொடர் மழையால், வில்வாதம்பட்டியில் உள்ள மானூர் கரவெளியில் தண்ணீர் வெள்ளம்போல் புகுந்தது.

இதில், வில்வாதம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் பலருக்குச் சொந்தமான அறுவடைக்குத் தயாராக இருந்த 80 ஏக்கருக்கும் மேலான நெல் வயல்கள் நீரில் மூழ்கின. இதனால், விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இது குறித்து, விவசாயி சக்திவேல் கூறும்போது, சாதாரணமாக கோடையில் அதிகமழை பெய்யாது. நாங்கள், ஏக்கருக்கு சுமார் ரூ. 15 ஆயிரம் வரை கடன் வாங்கி நெற்பயிரை நட்டுள்ளோம்.

உரம், பணியாளர் கூலி என சில ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். பயிர் நன்கு விளைந்து அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில், தற்போது பெய்த திடீர் கனமழையால், பாதிக்கும் மேற்பட்ட நிலங்கள் நீரில் மூழ்கி நெற்பயிர்கள் அழுகி வருகின்றன.

பல பகுதிகளில் வெள்ள நீர் பயிர்களை அடித்துச் சென்றுவிட்டன.

இதனால், விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகியுள்ளனர். இதற்கு, அரசு தகுந்த இழப்பீடு வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

**விளைநிலத்தை அழித்து விமான தளம்: காரைக்காலில் விவசாயம் அழியும் அபாயம்**

First Published : 26 Apr 2011 10:39:29 AM IST

காரைக்கால், ஏப். 25: விளைநிலங்களை அழித்து விமானத் தளம் அமைக்க புதுவை அரசு அனுமதி அளித்துள்ள செயல், அடுத்த 20 ஆண்டுகளில் காரைக்காலில் விவசாயம் முற்றிலும் அழிவதற்கான அபாய நிலையை ஏற்படுத்தியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதுவை யூனியன் பிரதேசமான காரைக்கால் விவசாய நிலங்கள் அதிகம் கொண்ட பகுதியாகும். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வரை 12 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கும் அதிகமாக சம்பா, குறுவை நெல் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்தன. ஆனால், விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் எதையும் புதுவை அரசு மேற்கொள்ளாததால், கடந்த 20 ஆண்டுகளாக

விளைநிலங்கள் விற்கப்பட்டு, ரசாயனத் தொழிற்சாலைகள் உள்ளிட்ட தொழிற்சாலைகள் அமைய வழிவகை செய்யப்பட்டது.

மேலும், பெரிய அளவில் ரியல் எஸ்டேட் தொழிலும் தீவிரமடைந்ததால், சாகுபடி பரப்பளவு குறைந்துவிட்டது. தற்போது 5 முதல் 7 ஆயிரம் ஹெக்டேரில் மட்டுமே விவசாயம் செய்யப்படுகிறது. இதன்மூலம் 28 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

இவ்வாறு விளைநிலங்கள் அளவு குறைந்து வரும் நிலையில், புதுவை அரசு போலகம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க சுமார் 600 ஏக்கர் விளைநிலத்தைக் கையகப்படுத்தியது. ஆனால், யாருமே தொழில் தொடங்க முன்வராததால், அந்த நிலம் புதர்கள் மண்டிக் கிடக்கிறது. இதுபோல, தனியார் துறைமுகம் அமைக்க 600 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலத்தை அரசே கையகப்படுத்தித் தந்தது.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை சிறப்பாக விவசாயம் செய்யப்பட்டு வந்த பகுதியான பொன்பேத்தி, புத்தக்குடி, வரிச்சிக்குடி கிராமத்தில் தனியார் விமானத் தளம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயம் செய்து வருமானம் ஈட்டுவதைக் காட்டிலும், நிலத்தை அதிக விலைக்கு விற்பதன் மூலம் லாபம் ஈட்ட முடியும் எனக் கருதி, விவசாயிகளும் நிலத்தை விமானத் தளம் அமைக்க தனியாருக்கு விற்று விட்டனர்.

இந்த நிலப்பரப்புக்கு அருகே தனியார் அறக்கட்டளை ஒன்று மருத்துவக் கல்லூரி தொடங்க சுமார் 50 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு நில உரிமையாளர்களிடம் முன்தொகை தந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காரைக்காலில் விமானத் தளம் அமைந்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு பயன் என புதுவை அரசும் தளம் அமைக்க தடையில்லாச் சான்றிதழ் அளித்துவிட்டது.

வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் விளைநிலம் அழிக்கப்படுவது தொடர்ந்தால், அடுத்த 20 ஆண்டுகளில் காரைக்காலில் விவசாயமே இல்லாமல் போய்விடும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

இதுகுறித்து காரைக்கால் பிரதேச விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் பி. ராஜேந்திரன் கூறியது:

விவசாயம் மேற்கொள்ள முடியாததற்கு முக்கியக் காரணம் தண்ணீர் பிரச்னை. அடுத்ததாக தொழிலாளர்கள் கிடைப்பது அரிது. விவசாயி உற்பத்தி செய்யும் நெல்லை அரசு சார்பில் கொள்முதல் செய்வதில்லை. உரம், விதை போன்றவற்றை தேவையான நேரத்தில் அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு முன்வருவதில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு காப்பீடு இருக்கிறது. விவசாயிக்கு காப்பீடு இல்லை. விளைநிலங்கள் அழிக்கப்படுவதற்கு அரசின் கவனக்குறைவே காரணம்.

எனவே, விளைநிலங்களை ரியல் எஸ்டேட், சுற்றுச்சூழலைப் பாதிக்கும் தொழில்சாலைகள் போன்றவை அமைக்க அனுமதி தருவதை அரசு நிறுத்த வேண்டும். விளைநிலங்கள் வீட்டு

மனைகளாக மாறுவதற்கு தடை விதிக்க புதுவை சட்டப்பேரவையில் உரிய சட்டம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அரசாணையாக வெளியிட்டால் ஓரளவு விளைநிலங்கள் அழிவைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்றார்.

**முட்டை விலை 5 காசுகள் உயர்வு**

First Published : 26 Apr 2011 01:21:41 PM IST

நாமக்கல், ஏப். 25: நாமக்கல்லில் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் விலை 215 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

கோடைக் காலம் தொடங்கி உள்ளதால் தமிழகம் மற்றும் வட மாநிலங்களில் முட்டையின் நுகர்வு சரிவைக் கண்டு வருகிறது. இதனால், முட்டையின் விலையும் படிப்படியாக குறைந்து, ஒரு முட்டையின் விலை 210 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது. எனவே, பண்ணையாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய லாபமும் குறைந்தது.

இந்நிலையில், ஆழ்கடலில் மீன் பிடிக்க தமிழக அரசு தடை விதித்தது. இதன் காரணமாக, தேவைக்கேற்ற மீன்கள் விற்பனைக்கு வராததால், மீன் விலையும் ஏற்றம் கண்டுள்ளது. எனவே, மீன் பிரியர்களின் கவனம் முட்டை, கோழி இறைச்சிப் பக்கம் திரும்பியுள்ளது. இந்நிலையில், முட்டை ஒன்றின் விலையை 5 காசுகள் உயர்த்தி, 215 காசுகளாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை நிர்ணயித்துள்ளது.

**மழையால் பூத்துக் குலுங்கும் பருத்திச் செடிகள்**

First Published : 26 Apr 2011 11:28:20 AM IST

ராஜபாளையம், ஏப். 25: ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் சில நாள்களாகப் பெய்த மிதமான மழையால் பருத்திச் செடிகளில் அதிக அளவில் பூ பூக்கத் துவங்கியுள்ளது.

இந்த ஆண்டு பருத்திக்கு நல்ல விலை நிலவி வருகிறது. இதனால் மாசிப் பட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பருத்தி சாகுபடி யை மேற்கொண்டனர். பங்குனி மாதத்தில் கடும் கோடை வெயிலால் பருத்தி விவசாயிகள் கலக்கமடைந்தனர். இந் நிலையில், சில நாள்களாகப் பரவலாக மழை பெய்ததால் பருத்திச் செடிகளில் அதிக அளவில் பூ பூக்கத் துவங்கியுள்ளது.

இதனால் விளைச்சல் போதிய அளவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கரூர் விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் ஆய்வு**

First Published : 26 Apr 2011 12:14:42 PM IST

கரூர், நவ. 25: கரூர் காந்திகிராமத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் திருச்சி விதைப் பரிசோதனை அலுவலர் கி. எழில்அரசு திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

இங்கு விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறை, பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவை குறித்து அவர் ஆய்வு செய்தார்.

மேலும், ஆய்வகத்திற்கு வரப்பெற்றுள்ள பணி விதை மாதிரிகள் மிகத் துல்லியமாக ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவுகள் பணி விதை மாதிரி அனுப்பியோருக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா என்றும் அதற்குரிய பதிவேடுகள், புகைப்படங்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்தார்.

ஆய்வகத்தின் மூத்த வேளாண் அலுவலர் அ. வெங்கட்ராமன் உடனிருந்தார்.

**காரியாபட்டி காய்கறி மார்க்கெட்டில் பட்டாணி, பட்டர்பீன்ஸ் விலை உயர்வு**

First Published : 26 Apr 2011 11:45:01 AM IST

காரியாபட்டி, ஏப். 25: காரியாபட்டி காய்கறி மார்க்கெட்டில் வரத்து குறைவால் பட்டாணி, பட்டர்பீன்ஸ் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. பட்டாணி கிலோ ரூ.120, பட்டர் பீன்ஸ் ரூ.100 என விற்பனையானது.

காரியாபட்டி காய்கறி மார்க்கெட்டில் கடந்த மார்ச் மாத இறுதியில் காய்கறிகளின் விலை சற்று குறைவாக இருந்தது. பின்னர் பங்குனிப் பொங்கல், மதுரை சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு காய்கறிகளின் விலை உயர்ந்தது.

கடந்த 4 நாள்களாகப் பரவலாகக் கோடை மழை பெய்து வருவதால் காய்கறிகளின் வரத்து குறைந்து விட்டது. காரியாபட்டி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோ ரூபாயில்) கத்தரி-14, வெண்டை-12, பாகற்காய்-40, மாங்காய்-20, கேரட்-20, முள்ளங்கி-20, அவரை-40, காலிபிளவர்-24, பச்சைபீன்ஸ்-40, உருளை-20, பட்டர்பீன்ஸ்-100, பட்டாணி-120, சிவப்புபீன்ஸ்-70, எலுமிச்சை-70, பீட்ரூட்-14, சவ்சவ்-24, முருங்கைக்காய்-28, சீனிஅவரை-14, தக்காளி-10, வெங்காயம்-32, பல்லாரி-14, கருணை-36, சேம்பு-34, சேனை-35, இஞ்சி-40, மல்லி-60, கோஸ்-14, சுரைக்காய்-16, பீர்க்கை-24, பூசணி-12.

தினமலர்

## ஈமு கோழிப்பண்ணை அமைக்க விருப்பமா?

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,00:00 IST



ஈமு கோழிகள் ரேட்டைட் இனத்தைச் சேர்ந்தவை. இப்பறவைகள் அவற்றின் விலைமதிப்புமிக்க இறைச்சி, முட்டைகள், தோல், தோலிலிருந்து பெறப்படும் எண்ணெய் மற்றும் இறகுகள் போன்றவற்றுக்காக வளர்க்கப்படுகின்றன. இப்பறவைகள் எந்த தட்பவெப்ப நிலையையும் தாங்கி வளரக்கூடியவை. ஈமு மற்றும் ஆஸ்டிரிச் பறவைகள் ஒரே சமயத்தில் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டாலும் ஈமு வளர்ப்பே அதிகம் பிரபலமடைந்து வருகிறது.

ஈமு, ஆஸ்டிரிச், ரியா, கேசோவரி மற்றும் கிவி ஆகிய பறவைகள் ரேட்டைட் இனத்தைச் சார்ந்தவை. இவற்றுள் ஈமு மற்றும் ஆஸ்டிரிச் கோழிகள் உலகத்தின் பல பகுதிகளில் அவற்றின் இறைச்சி, தோல், தோலிலிருந்து பெறப்படும் எண்ணெய், இறகுகள் ஆகியவற்றுக்காக வணிக ரீதியாக வளர்க்கப் படுகின்றன. இப்பறவைகள் வெப்பமான நாடுகளிலும், குளிர் பிரதேசங்களிலும் வளரக்கூடியன. இப்பறவைகள் திறந்தவெளியிலும், தீவிர முறையிலும் வளர்க்கப் படுகின்றன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகள் ஈமு கோழி வளர்ப்பில் முதலிடம் வகிக்கின்றன.

ஈமு கோழிகளின் உடலமைப்பு: ஈமுக்கள் நீண்ட கழுத்து, சிறிய தலையையும், கால்களில் மூன்று விரல்களையும் கொண்டதாக இருக்கும். மூன்று மாத வயது வரை ஈமுக்களின் உடலில் இறகுகள், நீண்ட கோடுகள் போன்று காணப்படும். ஆனால் இந்த கோடுகள் 4-12 மாத வயதில் மறைந்து, பழுப்பு நிறமாக மாறிவிடும். வளர்ந்த ஈமு பறவைகள் 6 அடி உயரமும் 45-60 கிலோ உடல் எடை உடையனவாகவும் இருக்கும். கால்கள் மிக நீண்டவையாக இருக்கும். அவற்றின் காலின் தோல்

மிக மொத்தமாகவும், செதில்களுடனும் காணப்படுவதால் மிக உறுதியாக இருக்கும். ஈமுக்களின் இயற்கையான உணவு பூச்சிகள், செடிகளின் இலைகள், பழங்கள் மற்றும் காய்கறிகளாகும். பெண் ஈமு பறவைகள் ஆண் பறவைகளைவிட பெரியதாக இருக்கும். ஈமுக்கள் முப்பது வருடம் வரை வாழக்கூடியவை. ஈமுக்களை மந்தையாகவோ அல்லது ஆண், பெண் பறவைகளாக ஜோடிகளாகவோ வளர்க்கலாம்.

**ஈமுவிலிருந்து கிடைக்கும் பொருட்கள்**: ஈமு கோழிக்கறி குறைந்த கொழுப்புச்சத்து கொண்டது. மேலும் மேல் தோல் மென்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். ஈமுக்களின் கால்தோல் சிறப்பான அமைப்பினைக் கொண்டிருப்பதால் அதிக விலைமதிப்பு கொண்டது. ஈமுக்களின் கொழுப்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் உணவுக்காகவும் மருந்தாகவும், அழகு சாதன பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

**ஈமு கோழிகளின் பண்ணைப் பொருளாதாரம்**: ஈமு கோழிகளின் பண்ணைப் பொருளாதாரத்தினைப் பற்றி மேற்கொண்ட ஒரு ஆய்வின் மூலம் மூலதன செலவில் 68% கோழிகளை வாங்குவதற்கும், 13% பண்ணையை அமைப்பதற்கும், 19% குஞ்சு பொரிப்பகத்தினை அமைப்பதற்கும் செலவாகிறது என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு கருவுற்ற முட்டையினை உருவாக்குவதற்கு ரூ.793 எனவும் ஒரு நாள் குஞ்சு ஒன்று உற்பத்தி செய்வதற்கு ரூ.1232 செலவாகிறது எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு ஜோடி ஈமு கோழி வருடத்திற்கு ஆகும் தீவனச்செலவு ரூ.3578. ஒரு நாள் வயதடைந்த ஈமு கோழிக்குஞ்சு ஒன்றின் விற்பனை விலை ரூ.2500 - 3000. எனவே, ஈமு கோழிப் பண்ணையினை லாபகரமாக நடத்த முட்டைகளின் குஞ்சு பொரிக்கும் திறன் 80 சதவீதத்திற்கு அதிகமாகவும் தீவனச்செலவு குறைவாகவும் குஞ்சு பருவத்தில் இறப்ப சதவீதம் 10 சதவீதத்திற்கும் குறைவாகவும் இருக்க வேண்டும்.தொடர்புக்கு: ஆர்.ஜி.ரீஹானா, 268/77, ஓல்ட் ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர், தாராபுரம்-638 657.-ஆர்.ஜி.ரீஹானா, எம்.எஸ்சி., எம்.பில்., அக்ரி கிளினிக், 89037 57427.

**மீன் பண்ணைக்கான கட்டுமானம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,00:00 IST

**நாற்றங்கால் குளங்கள்**: தரமான மீன் குஞ்சுகளே மீன் உற்பத்தியினை அதிகப் படுத்தும். ஆதலால் நாற்றங்கால் அமைப்பு ஒரு பண்ணைக்கு மிகவும் அவசியமாகும். இந்த நாற்றங்கால்கள் சிறியனவாகவும் ஆழம் குறைந்தனவாகவும் அடிக்கடி நீர் மாற்றம் செய்வதற்கு ஏற்றதாகவும் அமைத்திடல் வேண்டும். பொதுவாக நாற்றங்கால்கள் 200-600 ச.மீ. வரையுள்ள குளங்களாக அமைக்கப் படலாம். இக்குளங்கள் பொதுவாக 1.0 - 1.5 மீட்டர் ஆழமுள்ள நீரினை தேக்கி

வைக்கக்கூடியதாக உள்ளது. நீரின் அளவு குறைவாக உள்ளதால் கரைப்பகுதி மிகுந்து அகன்று இருக்கத்தேவையில்லை. கரையின் உட்சாய்வு மற்றும் வெளிச்சாய்வு 2:1 என்ற விகிதத்தில் அமைக்கலாம்.

**வளர்ப்புக் குளங்கள்:**ஒரு மீன் பண்ணையில் வளர்ப்புக்குளங்கள் நாற்றங்கால் குளங்களைவிட பெரியவையாக இருத்தல் வேண்டும். இத்தகைய குளங்களை பொதுவாக 0.06 - 0.10 எக்டர் பரப்புடையதாக அமைத்தல் நல்லதாகும். இவைகளை 1.5 - 2 மீட்டர் ஆழமுள்ள செவ்வக குளங்களாக அமைக்கலாம். இதன் கரைகளின் உட்சாய்வு மற்றும் வெளிச்சாய்வு ஆகியவை 2:1 என்ற விகிதத்தில் அமைக்கலாம். அறுவடை காலத்திலும் அவசர வேளைகளிலும் குளத்து நீரினை விரைவாக உள்ளேற்ற மற்றும் வெளியேற்றத்தக்க வகையில் வடிகால் வசதி அமைய வேண்டும்.

**இருப்புக்குளங்கள்:** இருப்புக்குளங்கள் நீர்த்தேக்கப் பரப்பு அதிகமாக இருக்குமாதலால் இக்குளங்கள் பண்ணையின் அளவினைப் பொறுத்து 0.2 - 2.0 எக்டேர் வரை அமைக்கலாம். பொதுவாக 1.5 - 2.5 மீ ஆழமுள்ள 0.4 - 0.5 எக்டர் அளவுள்ள குளங்களை அமைக்கலாம். குளங்கள் அமைக்கும்போது அவ்விடம் மிகவும் தாழ்வாக இருந்தால் மேலும் அவ்விடத்தை அகன்று தோன்றி குளம் அமைப்பது பலவகைகளில் இடையூறாக அமையும். அத்தகைய இடங்களில் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து மண் எடுத்து கரை அமைத்து அந்நிலத்தின் மட்டத்திலேயே குளம் அமைத்திடலாம். இதனால் முழுமையான வடிகாலுக்கு வாய்ப்பு அளிக்கும். இவை கரை அமைப்புக்குளங்கள் எனக்கூறப்படும்.

**பகுதி மட்டும் தோண்டப்பட்ட குளம்**: நிலத்தின் மட்டமானது ஓரளவு உயரமாக இருப்பின் அதனை ஆழமாக தோண்டினால் நீரை வடிக்கும் வாய்ப்பினை இழக்கும். எனவே குளத்தினை ஓரளவிற்கு மட்டும் தோண்டி கரையை அமைத்து நீரைத் தேக்கிடலாம்.

முழுவதும் தோண்டப்பட்ட குளம்: நிலமானது மேடாக இருக்குமாயின் அவ்விடத்தை குளம் அமைக்க தேவையான ஆழத்திற்கு தகுந்த வடிகால் மட்டம் கொடுத்து கரையை அமைத்திடலாம். மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி அமைக்கப்படும் குளங்களின் அடிப்பகுதி அதிக நீர்க்கசிவு உடைய மண்ணைக் கொண்டு இருப்பின் அதனை மாற்றி களிமண் மற்றும் பிற மண்களைக் கலந்து நீர்க்கசிவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குளத்தின் அடிமட்டத்தில் இடப்படும் மண் அதிக நச்சுத்தன்மை வாய்ந்த மண்ணாகவோ அல்லது முழுவதுமாக களிமண் மற்றும் வண்டல்மண் நிறைந்த மண்ணாகவோ இருந்திடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மீன் உற்பத்தியின்போது அதன் வளர்ச்சிக்கு நீரில் கலந்துள்ள தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிர்கள் வளர்வதற்கு ஊக்குவிப்பது பெரும்பாலும் மண்ணின் தன்மையாகவே அமைவதால் குளத்தின் அடிப்பகுதியில் இடப்படும் மண் தாதுக்கள் மற்றும் சத்துள்ள மண்ணாக இருப்பது அவசியம்.

மீன் பண்ணைகள் அமைக்கும்போது நாற்றங்கால் குளங்களைச் சுற்றியும் தவளை, நீர்நாய் மற்றும் பாம்பு ஆகியவை நீரினுள் புகாமல் இருக்க வலைவேலி அமைப்பது மிக அவசியம். பண்ணைக்கு

நீர்வரத்து ஆறு போன்ற இயற்கை நீர்நிலைகளிலிருந்து பெறப்பட்டாலும் அவசரத் தேவைக்கு பண்ணைக்கென ஒரு ஆழ்குழாய் கிணறு அமைப்பது நல்லது. அதே சமயம் இயற்கை நீர்நிலைகளில் இருந்து நீரினை எடுத்திடும்போது (செடிமென்டேஷன் டேங்க்) அமைப்பது நல்ல பயனைத் தரும். பண்ணைக் குளங்களின் கரைகளில் அக்கரைகள் சரிந்துவிடாமல் இருந்திட பெரிய அளவிலான மரங்களை வளர்க்கலாம். மீன் வளர்ப்புக் குளங்களுக்கென அமைக்கப்படும் நீர் உட்புகும் கால்வாய்களின் இணைப்பினையும், நீர் வெளியேற்றும் கால்வாய்களின் இணைப்பினையும் பண்ணையின் இரு பக்கங்களிலும் தனித்தனியே இருக்கும் வகையில் பார்த்துக் கொள்வது நல்லது.

நன்னீர் மீன்வளர்ப்பில் ஈடுபட்டு பொருளீட்ட விரும்புவோர் மேற்சொன்ன வழிமுறைகளை தவறாது பின்பற்றி பண்ணைக் குளங்களை அமைத்திட்டால் நிறைந்த லாபம் பெறுவர் என்பது உறுதி.பா.கணேசன், வெ.பழனிச்சாமி, வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,00:00 IST



**சவுக்கு சாகுபடி:** ஒரு காலத்தில் கடற்கரை பகுதிகள், அதிக மணற்பாங்கான பகுதிகள், தரிசுநிலங்கள் போன்ற இடங்களில் மட்டும்தான் சவுக்கு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சமீபகாலமாக அனைத்து பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்புகளிலும் இடம்பிடிக்க ஆரம்பித்துவிட்டது சவுக்கு. புதுக்கோட்டை மாவட்டம் பாரதிபுரம் விவசாயி தளபதி (94435 93339) இறவையில் 20 ஏக்கர் சவுக்கு மரம் சாகுபடி செய்துள்ளார். இன்னும் 10 ஏக்கருக்கு நடவு செய்ய உள்ளார். 4 அடிக்கு 4 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். 1 ஏக்கருக்கு 4000 கன்றுகள் (ஜிங்கினியானா ரகம்) தேவைப்படும். ஒரு அடி நீள, அகல, ஆழமுள்ள குழிகளை

எடுத்து அதில் தொழு உரம், மண்புழு உரங்களை இட்டு நடவு செய்ய வேண்டும். முதல் 2 வருடமும் தவறாமல் கவாத்து செய்ய வேண்டும். மூன்றரை வருடத்திற்கு மேல் டிமாண்டைப் பொறுத்து மரத்தை வெட்டி விற்றுவிடலாம். 1 ஏக்கருக்கு சராசரியாக 50 டன் மகசூல் எடுக்கிறார். எல்லா செலவும் போக ஒரு ஏக்கரில் ஒரு லட்சம் ரூபாய்க்கு குறையாமல் லாபம் கிடைக்கிறது என்று தெரிவிக்கிறார் விவசாயி. (பசுமை விகடன், 25.2.11)

விதை முதல் நாற்று விற்பனை வரை நிழல் வலையங்கள் அடிப்படையில் அமைப்பதற்கு **தொடர்பு முகவரி**: ""டோட்டல் அக்ரோ வெட்கேர், 86, நர்சரி கார்டன், குளூர், கொமரெளி வலசு, மொடக்குறிச்சி, ஈரோடு-638 109.
மொபைல்: 99945 74445 / 94436 83410.

**வண்ண மீன்கள் வாங்க தொடர்பு முகவரி**: கிங் அக்வாடிக், வீரமைந்தன், மேற்கு மாடவீதி, பாடசாலை தெரு, கொளத்தூர், சென்னை-99. மொபைல்: 98844 21155/ 97909 49361.

**பருத்தி விதை இருப்பு நிலவரம்:** பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர், 04563-260 736-ஐ தொடர்புகொண்டு கீழ்க்கண்ட விதைகளை விலைக்கு வாங்கலாம்.
பருத்தி எஸ்.வி.பி.ஆர்.2 (உண்மை நிலை விதை) ரூ.75/ கிலோ), பருத்தி எஸ்.வி.பி.ஆர்.2 (வல்லுனர் விதை) விலை ரூ.150. பருத்தி எஸ்.வி.பி.ஆர்.3 (வல்லுனர் விதை) விலை ரூ.150/- கிலோ. பருத்தி எஸ்.வி.பி.ஆர்.4 (உண்மை நிலை விதை) ரூ.75/- கிலோ.

செங்காந்தள் மலர் என்று அழைக்கப்படும் மூலிகைத்தாவரம் தமிழகத்தில் மூலனூர், திருப்பூர், ஒட்டன்சத்திரம், அம்பிளிக்கை, மார்க்கம்பட்டி, ஜெயம்கொண்டான், வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் பயிரிடப் படுகிறது. இப்பயிரை இனக்கருகல் நோய் அதிகளவில் தாக்கி சேதத்தை விளைவிக்கிறது. இந்நோயை உண்டாக்கும் நோய்காரணிகள்: கர்வுலேரியா மற்றும் ஆல்டெரியாவாகும்.
கர்வுலேரியா தாக்கிய இலைகளில் குறுகிய நீள் முட்டை வடிவ புள்ளிகள் தோன்றி நாளடைவில் புள்ளிகள் பெரிதாகி இலைப்பரப்பை ஆக்கிரமித்து பின் இலைகள் கருகி காய்ந்துவிடும்.
ஆல்டெரியா தாக்கிய இலையின் புள்ளிகள் வளை யங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்தது போல் காணப்படும். நாளடைவில் இலைகள் கருகி காய்ந்துவிடும்.
**இந்நோயைக் கட்டுப்படுத்த:** கீழே விழுந்த காய்ந்த இலைகளை சேகரித்து அப்புறப் படுத்துதல், டைத்தேன் எம்45 (2 கிராம்/லிட்டர் தண்ணீர்) அல்லது ஹெக்கா கோனஜோல் (1 கிராம்/லிட்டர்) அல்லது புரோப்பிகோன ஜோல் (1 கிராம்/லிட்டர் தண்ணீர்) தெளித்தல் ஆகியவை பலன்தரும். நோயின் தீவிரத்தைப் பொறுத்து 2-3 முறை தெளிக்கலாம். (தகவல்: சி.வனிதா, ஜி.சந்திரசேகர்,

க.ராஜாமணி, பயிர் நோயியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 96777 39126)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**அறுவடை சமயத்தில் மழை; சூரியகாந்தி பயிர் பாழ்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,00:38 IST

பொங்கலூர் : அறுவடை சமயத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், பொங்கலூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சூரியகாந்தி பயிர் களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெப்ப மண்டல பயிரான சூரியகாந்தி மூன்று மாதத்தில் விளைந்து மகசூல் கொடுக் கக்கூடியது. இது, அதிக வெப்பம் நிலவும் பிப்., மாதத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. பொங்கலூர் வட்டாரத்தில் தாயம்பாளையம், உப்புக்கரைப்பாளையம், சேமலைக்கவுண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் சூரியகாந்தி சாகுபடி செய்திருந்தனர். அதிக மழைப்பொழிவு மற்றும் பனி காலங்களில் இதன் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனால், விவசாயிகள் கோடை காலத்தில் மட்டுமே சாகுபடி செய்வர்.

இப்பகுதியில் விளையும் சூரியகாந்தி, காங்கயம், வெள்ளகோவில் பகுதியில் உள்ள ஆயில் மில்களுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், கொழுப்பு நீக்கம் செய்யப்பட்டு, ரீபைண்டு ஆயில் என்ற பெயரில் விற்பனைக்கு வருகிறது. கடந்த பிப்.,யில் சாகுபடி செய்யப்பட்ட சூரியகாந்தி, தற்போது அறுவடை பருவத்தை எட்டியுள்ளது. வழக்கமாக கடும் வறட்சி நிலவும் ஏப்., மாதத்தில் இந்தாண்டு வரலாறு காணாத அளவு மழை பெய்து விவசாயிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. முரண் பட்ட காலநிலையால், விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த சூரியகாந்தி விதைகள் மழையால் பாதிக்கப்பட்டு அழுகி வீணாகி வருகின்றன. சூரியகாந்தி விதைக்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்து வரும் சூழ்நிலையில், மழை பாதிப்பு காரணமாக பாதியளவு கூட மகசூல் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கூறுகையில், "வழக்கமாக, கிலோவுக்கு 25 முதல் 30 ரூபாய் வரை விலை கிடைக்கும். இந்தாண்டு கிலோ 36 ரூபாய்க்கு விற்பனையாவதால், நல்ல லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். எங்கள் நம்பிக்கை பொய்த்து விட்டது. கடந்தாண்டு, மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டது. இந்தாண்டு மழை குறுக்கிட்டு பயிர்களை அழித்து விட்டது,' என்றனர்.

**மழையால் காய்கறி செடிகள் பாதிப்பு : விலை உயரும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,02:03 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக காய்கறி செடிகளில் தண்ணீர் தேங்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மலிவு விலையில் கிடைத்த காய்கறி விலை திடீரென உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கன்னியாகுமரி மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் வளிமண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சியின் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த 8 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தென் மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

கோடை வெப்பத்தை தாங்க முடியாமல் தவித்த மக்களுக்கு இந்த மழை இதமாக இருந்தது. அதே நேரத்தில் காய்கறி செடிகளான கத்தரி, வெண்டை, மலர் செடிகளுக்கு இந்த மழை உகந்தது அல்ல. ஜனவரி மாதத்திற்கு பிறகு சாகுபடி செய்துள்ள கத்தரி செடிகள் உச்சகட்ட கோடைக்குள் அதிக பட்சமான விளைச்சலை கொடுப்பது வழக்கம். இந்த அதிகபட்ச விளைச்சலால் மார்க்கெட்டில் கத்தரி 3 ரூபாய் முதல் 4 ரூபாய் வரையிலும், வெண்டை 2 - 3 ரூபாய் வரையிலும், தக்காளி 5 ரூபாயாகவும், உருளைக்கிழங்கு 14 ரூபாயாகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இந்த விலை குறைவு இல்லத்தரசிகளுக்கு மகிழ்ச்சிகரமாக இருந்தது. இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக காய்கறி செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் கனமழை இல்லாவிட்டாலும் தினம் தினம் பெய்து வரும் தொடர் மழையால் தோட்ட பயிர்கள் சேதமடைந்துள்ளன. கடலூர் சுற்றியுள்ள கிராமங்களான கிருஷ்ணாவரம், நாணமேடு, சுபாஉப்பலவாடி, ரெட்டிச்சாவடி உள்ளிட்ட கிராமங்களில் கத்தரி, வெண்டை, தர்பூசணி, மலர் செடிகள் அதிகளவில் பயிர் செய்யப்பட்டுள்ளன. கத்தரிச்செடியை பொறுத்தவரை 10 மாதம் வரை தொடர்ந்து காய்க்கக்கூடியது. தற்போது காய்க்கத் துவங்கி 2 மாதமே ஆகின்ற நிலையில் கடந்த ஒரு வாரம் பெய்த மழையினால் காய்கறி செடி வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளன.

இதனால் செடியின் வேர்கள் அழுகி சோர்ந்து போய் இறந்து வருகின்றன. இதேபோன்று மலர் சாகுபடி செய்த விவசாயிகளும் நஷ்டமடைந்துள்ளனர். கோடையின் தாகத்தை தீர்ப்பதற்காக போடப்பட்ட தர்பூசணி மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர். தொடர் மழையினால் காலாவதியான

செடிகளால் உற்பத்தி குறைந்து மீண்டும் காய்கறி விலை கடுமையாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**மரவள்ளி, கரும்பில் மாவுப்பூச்சி தாக்குதல்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,01:55 IST

பெத்தநாயக்கன்பாளையம்: ஆத்தூர், கல்வராயன்மலை கிராமங்களில் மரவள்ளி, கரும்பு உள்ளிட்ட பயிர்களில் "மாவுப்பூச்சி' தாக்கம் அதிகரித்துள்ளதால் பயிர்கள் கருகி வருகிறது. அதனால், மலைவாழ் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர் அருகே பெத்தநாயக்கன்பாளையம் யூனியனில், பெரிய கல்வராயன்மலை உள்ளது. அதில், கருமந்துறை, சூலாங்குறிச்சி, தும்பல், இடையப்பட்டி, நெய்யமலை, மண்ணூர், அக்கரைப்பட்டி, ஆலங்கடை, செம்பரக்கை, கரியக்கோவில், தும்பல் உள்ளிட்ட மலை கிராமங்கள் உள்ளன. இங்கு மரவள்ளி, கரும்பு, மஞ்சள், பாக்கு, தென்னை, மா, பலா, மிளகு, ஏலக்காய், முந்திரி போன்றவை பிரதான பயிர்களாக இருக்கிறது. இந்நிலையில், மரவள்ளி, கரும்பு உள்ளிட்ட பயிர்களில் மாவுப்பூச்சி (வெள்ளை பூச்சி) தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. அதனால், மரவள்ளி மற்றும் கரும்பு பயிர்கள் வளர்ச்சியின்றி காய்ந்து கருகி வருகிறது. அதுகுறித்து, சம்மந்தப்பட்ட வேளாண்த்துறை, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவுப்பூச்சி தாக்கத்தினால், மரவள்ளி மற்றும் கரும்பு பயிர்கள் அழிந்து வரும் நிலை உள்ளதால், மலைவாழ் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து தமிழக மலைவாழ் மக்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் பழனிசாமி கூறியதாவது: கல்வராயன்மலை கிராமங்களில் உள்ள மேட்டுப் பகுதிகளில், மரவள்ளி, நீர் நிலையொட்டி கரும்பு, மஞ்சள், நெல், மா, பலா போன்றவை பயிரிடப்படுகிறது. மாவுப்பூச்சி தாக்கத்தினால் மரவள்ளி செடிகள் அழிந்து வருகிறது. மாவட்ட நிர்வாகம், பயிர்களில் தாக்கியுள்ள மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**தொடர் மழையால் மிளகாயில் பூஞ்சை தொற்று:நஷ்டத்தால் கொளத்தூர் விவசாயிகள் சோகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,02:07 IST

மேட்டூர்: தொடர் மழையால், மிளகாய் வத்தல் பூஞ்சைகளால் பாதித்துள்ளதால், நஷ்டம் அடைந்த கொளத்தூர் விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் பண்ணவாடி, சேத்துக்குழி, கருங்கல்லூர், காவேரிபுரம், கோவிந்தபாடி, கோட்டையூர் சுற்றுப் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்வது வழக்கம் ஆண்டுதோறும், டிசம்பர் முதல், ஏப்ரல் இறுதி வரை, கொளத்தூர் வாரச்சந்தைக்கு

மிளகாய் வத்தல் விற்பனைக்கு வரும். நடப்பாண்டில் மிளகாய் முதிர்ச்சி அடையும் பருவத்தில் தொடர்ந்து மழை பெய்ததால் உற்பத்தி பாதித்ததால், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் சந்தைக்கு மிளகாய் வத்தல் வரத்து குறைந்தது. கடந்த ஆண்டு மிளகாய் வத்தல், ஒரு கிலோ, அதிகபட்சமாக, 110 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பாண்டில் கொளத்தூர் சந்தையில் ஒரு கிலோ முதல் ரக வத்தல் அதிகபட்சமாக, 125க்கு விற்ற போதிலும், சீஸன் முடிவடையும் தருவாயில் கிலோ 100 ரூபாய்க்கு விற்பனையானது. இறுதிகட்டமாக விவசாயிகள் சாகுபடி செய்த மிளகாய் வத்தல் தற்போது சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. விவசாயிகள் மிளகாய் வத்தலை வீட்டு முன் நன்கு உலர வைத்து விற்பனைக்கு எடுத்து செல்வது வழக்கம். நான்கு நாட்களாக மேட்டூர் சுற்றுப்பகுதியில் கோடைமழை பெய்தது. அதனால், பறித்த மிளகாய் வத்தலை விவசாயிகளால் உலர வைக்க முடியவில்லை. ஈரப்பதமாக இருந்த மிளகாய் வத்தலின் உட்பகுதியில் பூஞ்சைகள் தொற்றி கொண்டது. பூஞ்சை தாக்கிய வத்தல் சந்தையில் குறைந்த விலைக்கே விற்பனையாகும். அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். கொளத்தூர் பகுதியில் பெய்த தொடர் கோடை மழையால் உலர வைக்க முடியாமல் பல டன் மிளகாய் வத்தல் பூஞ்சை தொற்றுதலால் பாதித்துள்ளதால் சாகுபடி செய்த விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

**மழையால் நிலத்தில் சாய்ந்த நெற்கதிர்கள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,02:03 IST

மேட்டூர்: மேட்டூர் சுற்றுபகுதியில் பெய்த தொடர்மழை காரணமாக நிலத்தில் சாய்ந்த நெற்கதிர்களில் உள்ள நெல்மணிகள் முளை விட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேட்டூர் காவிரி கரையோரப்பகுதியில் சம்பா சாகுபடி முடிந்த பின், விவசாயிகள் பலர் கோடைநெல் சாகுபடி செய்வது வழக்கம். மாதையன்குட்டை, காவேரிகிராஸ், செக்கானூர், கொளத்தூர், கோவிந்தபாடி, காவேரிபுரம், செட்டியூர் பகுதியில் விவசாயிகள் கோடைநெல் சாகுபடி செய்தனர். சாகுபடி செய்த பயிர்கள் முதிர்ந்து அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் மேட்டூர் சுற்றுப்பகுதியில் கோடைமழை தீவிரம் அடைந்தது. கடந்த ஏப்.,21ல், 44.4 மி.மீ., ஏப்.,22ல் 49.8, ஏப்.,23ல் 29, நேற்று முன்தினம் 29.2 மி.மீ., என நான்கு நாளில் 125.8 மி.மீ., மழை பெய்தது. தொடர்மழை காரணமாக தண்ணீர் தேங்கி முதிர்ந்த நெற்பயிர்கள் அனைத்தும் நிலத்தில் சாய்ந்தது. இரு நாட்களாக பகலிலும் மழை பெய்ததால் விவசாயிகளால் நெற்பயிரை அறுவடை செய்யவும் முடியவில்லை. அதனால், நிலத்தில் சாய்ந்த கதிர்களில் உள்ள நெல்மணிகள் அனைத்தும் முளைத்து போனது. தொடர்மழை காரணமாக மேட்டூர் சுற்றுப்பகுதியில் நெல்கதிர்கள் நிலத்தில் சாய்ந்து சேதமானதால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

**மேட்டூர் அணையில் தோட்டா வீசி மீன் பிடிப்பு:முதல் ரக மீன்கள் செத்து மிதப்பதால் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,02:01 IST

மேட்டூர்: மேட்டூர் அணை பாலாறு நீர்பரப்பு பகுதியில், திருட்டு மீன்பிடி கும்பல் தோட்டா வீசி, மீன்கள் பிடிப்பதால், அணையின் மீன்வளம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, மீன்துறை உரிமம் பெற்று மீன் பிடிக்கும் மீனவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மேட்டூர் அணை, 152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணையில் தற்போது நீர்மட்டம், 110 அடியாக இருப்பதால், அணையில் இருந்து, 28 கி.மீ., தூரத்தில் பாலாறு-காவிரி இணையும் இடம் வரை தண்ணீர் தேங்கி நிற்கிறது.

மேட்டூர் அணையில் மீன்துறை சார்பில் ஆண்டுதோறும், 25 முதல், 30 லட்சம் கட்லா, ரோகு, மிர்கால் மீன் குஞ்சுகள் விடப்படுகிறது. அணையில் மீன்துறை உரிமம் பெற்று, 2,000 மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர். மீன்துறை சார்பில் விடப்படும் குஞ்சுகள் நன்கு வளர்ந்த பின்பே பிடிக்க வேண்டும். ஆனால், மீனவர்கள் பலர் சிறிய ஆயவலை மூலம் மீன்குஞ்சுகளை பிடித்து கருவாடக்கி விற்பதால் அணையின் மீன் வளம் பாதித்தது.

இந்நிலையில், திருட்டு மீன் பிடி கும்பல் சமீபகாலமாக பாலாறு நீர்பரப்பு பகுதியில் தோட்டங்களை வீசி மீன் பிடிக்கின்றனர். தோட்டங்கள் வீசுவதால் குஞ்சுகள் மட்டுமின்றி பெரிய சைஸ் மீன்களும் நீரில் செத்து மிதக்கிறது. மேட்டூர் அணை மீனவர்கள் கூறியதாவது: நாங்கள் பாலாறு வனப்பகுதியில் முகாமிட்டு மீன் பிடிக்கிறோம். இரு நாட்களுக்கு முன் மீன்துறை ஊழியர்கள் விசைப்படகில் வந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இரு நாட்களுக்கு முன் விசைப்படகை எங்கள் பகுதியில் நிறுத்தி விட்டு சென்றவர்கள் திரும்ப வரவில்லை. இரு நாட்களாக பலத்த மழை பெய்ததால் நாங்களும் சொந்த கிராமத்துக்கு சென்று விட்டோம். அதை அறிந்த திருட்டு மீன்பிடி கும்பல், இரு நாட்களாக அணை நீர்பரப்பு பகுதியில் தோட்டா போட்டு மீன் பிடித்துள்ளனர். மீன்கள் இனப்பெருக்க சமயத்தில் தோட்டா போட்டு மீன் பிடிப்பதால் ஏராளமான பெரிய மீன்களும் செத்து மிதந்துள்ளது.

அவர்கள் அள்ளி சென்றது போக மீதமுள்ள மீன்கள் நீரில் அழுகி மிதப்பதால் துர்நாற்றம் வீசுகிறது. தோட்டா போடுவதால் மேட்டூர் அணை மீன்வளம் பாதிக்கும் அபாயம் உள்ளது. அணையில் தோட்டா போட்டு மீன் பிடிப்பதை தடுக்க மீன்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தக்காளி மதிப்பு கூட்டுதல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,00:39 IST

தர்மபுரி: பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில் தக்காளி மதிப்பு கூட்டுதல் இலவச பயிற்சி வரும் மே 3ம் தேதி நடக்கிறது. வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம், நல்லம்பள்ளி, அரூர் உள்ளிட்ட வட்டாரங்களில் தக்காளி இறவை பயிராக மானாவாரியாகவும், 24 ஆயிரத்து 450 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தக்காளியில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களான ஊறுகாய், ஸ்குவாஸ் ஜாம், பூரி உள்ளிட்டவைகள் தயாரித்தல் தொடர்பான இலவச பயிற்சி வரும்3ம் தேதி பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நடக்கிறது.

இப்பயிற்சியானது எவ்வித கட்டணமும் இல்லாமல் இலவசமாக நடக்கிறது. ஆர்வமுள்ள தக்காளி விவசாயிகள் முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். இணை பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் அறிவியல் நிலையம் பழைய பாபபாரப்பட்டி (அரசு விதை பண்ணை அரகில்) பாப்பாரப்பட்டி என்ற முகவரியில் தொடர்பு கொண்டும், டெலிஃபோன் எண் 04342 - 245860 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மல்லிகை பூ விலை சரிவு: வாட்டத்தில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,01:45 IST

சத்தியமங்கலம்:சத்தியமங்கலத்தில் பூக்களின் விலையில் தொடர் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். சத்தியமங்கலம் பகுதியில் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் மல்லிகை பூ பயிரிட்டுள்ளனர். தினமும் இப்பகுதியில் இருந்து 15 டன் மல்லிகை பூக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்டு அருகேயுள்ள பூ மார்க்கெட்டில் ஏலம் முறையில் பூக்கள் விற்பனை செய்யப்படுகிறது. பின்னர், இங்கிருந்து தமிழகம் முழுவதும் மல்லிகை பூக்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. பெங்களூரு மற்றும் மைசூர் பகுதியில் சத்தியமங்கலம் மல்லிகைக்கு தனி மவுசு உள்ளது. இங்கு விளையும் மல்லிகை பூவின் காம்பு பெரிதாக இருப்பதே காரணம்.

இதேபோல் கோயமுத்தூரில் இருந்து விமானம் மூலம் சத்தியமங்கலம் மல்லிகை பூக்கள், மும்பைக்கு செல்வது குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற சத்தியமங்கலம் மல்லிகை பூக்கள் சீஸன் நேரத்தில் ஒரு கிலோ 1,500 ரூபாய் வரை விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. தற்போது, மல்லிகை பூக்களின் விலை கடுமையாக சரிந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகை பூ 25 முதல் 60 ரூபாய் வரையே விற்பனையாகிறது. ஒரு கிலோ மல்லிகை பூ பறிப்பதற்கு 30 ரூபாய் கூலி தரப்படுகிறது. ஆனால், கூலியைக் காட்டிலும், விற்பனை விலை குறைவாக உள்ளதால், மல்லிகை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

மல்லிகை விவசாயி வடவள்ளி முத்துராஜ் கூறுகையில், ""பத்து ஆண்டுக்கு மேலாக மல்லிகை பூக்களை பயிரிட்டு வருகிறேன். தற்போது, இதன் விலை மிகவும் குறைவாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் உற்பத்தி அதிகமே. இந்த விலைக்கு தொடர்ந்து விற்றால் மல்லிகை பூ விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவர்," என்றார்.

**சேலம் மாம்பழங்கள் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2011,01:44 IST

ஈரோடு:சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதியிலிருந்து மாம்பழங்கள் வந்து குவிகின்றன. தமிழகத்தில் டிசம்பர் மாத இறுதியில், மாமரங்கள் பூக்கத் துவங்குகின்றன. மார்ச் இரண்டாவது வாரத்துக்கு பின், காய்கள் ஓரளவு வளர்ச்சியடைந்து, பழுக்கத் துவங்குகின்றன. ஓரளவு பழுத்த காய்கள் பறிக்கப்பட்டு, விற்பனைக்கு அனுப்பபடுகின்றன. ஈரோடு மாவட்டத்துக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் பகுதியிலிருந்து மாம்பழங்கள் அதிகளவு ஈரோடு வருகின்றன. சென்றாண்டை விட நடப்பாண்டில் மா உற்பத்தி அதிகரித்துள்ளது. தற்போது வரத்து குறைவாக இருப்பதால் விலை உயர்ந்துள்ளது. பங்கனப்பள்ளி ஒரு கிலோ 40 ரூபாய், சேலம் பெங்களூரா 60, செந்தூரா 20, மல்கோவா 60, அதிக சுவையுடைய இமாம்பசந்து 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
மல்கோவா வரத்து மிகவும் குறைவாக உள்ளதால், கடும் தட்டுப்பாடு உள்ளது. கேரள மாநிலம் தலச்சேரி, மணச்சங்காடு பகுதியிலிருந்து, பலாப்பழங்கள் விற்னைக்கு குவிகிறது. பலாப்பழ சீஸனும் தற்போதுதான் துவங்குவதால், ஒரு பழம் 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. வரும் ஜூன் மாதம் வரை மாம்பழம் சீஸன் நீடிக்கும். தமிழகத்தில் பண்ரூட்டியில் பலாப்பழம் சீஸன் துவங்கவில்லை. கேரள பலாப்பழங்கள் 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். பண்ரூட்டி பலாப்பழங்கள் வரத்து துவங்கினால், விலை மேலும் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**மானியத்துடன் நுண்ணுயிர் உரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,22:09 IST

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றிய பகுதிகளில் கோடை மழை பெய்து வருவதால் விவசாயிகள் பயிறு வகைகள் சாகுபடி செய்ய துவங்க உள்ளனர். கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு, கோம்பைத்தொழு, சிங்கராஜபுரம், கண்டமனூர், ராஜேந்திரநகர், பாலூத்து, குமணந்தொழு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை, மூலக்கடை,முத்தலாம்பாறை, உட்பட பல கிராமங்களில் மானவாரி விவசாயம் அதிகம் நடக்கிறது. விவசாயத்துறை மூலம் தட்டான்பயிருக்கு 12 சதவீதம்,பாசிபயிருக்கு 30 சதவீதம் மானியமும், மானியத்துடன் நுண்ணுயிர் உரங்களும் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் விவசாயத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு விவசாயத்துறை உதவி இயக்குனர் சங்கரன் தெரிவித்தார்.

**ஏற்றுமதி ரக திராட்சை சாகுபடிக்கு பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,22:07 IST

கம்பம் : ஏற்றுமதி ரக திராட்சையை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்று திராட்சை ஆராய்ச்சி நிலையம் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கம்பம் பள்ளத்தாக்கில், ஆண்டுமுழுவதும் திராட்சை சாகுபடி செய்யப்படுவதால் தொடர்ந்து கட்டுபடியான விலை கிடைக்க ஒயின் தொழிற்சாலை அமைக்க விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். அதன்பேரில் கடந்த ஆண்டில் ஆனைமலையன்பட்டி அருகே ஒயின் தொழிற்சாலை துவங்கப்பட்டது.இங்கு சாகுபடியாகும் திராட்சையில் இனிப்பு தன்மை குறைவாக இருப்பதாகவும், பூச்சி கொல்லி மருந்துகள் அதிகம் பயன்படுத்துவதால், அதன் தாக்கம் இருப்பதாகவும் கூறி, ஒயின் தொழிற்சாலை, திராட்சையை வாங்க மறுத்தது. இந்நிலையில் ஒயின் தயாரிக்க தேவைப்படும் ரகத்தை சாகுபடி செய்யுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும் திராட்சை சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்தவும், திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்று திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பேராசிரியர் மற்றும் உதவி பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். முதற்கட்ட பணிகளை அவர்கள் துவக்கி உள்ளனர். ஒயின் ரகத்தை இப்போதைக்கு சாகுபடி செய்ய வேண்டாம் என்றும், ஏற்றுமதிக்கேற்ற ரகங்களை சாகுபடி செய்யவும் விவசாயிகளுக்கு அவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இதற்கென சில ஏற்றுமதி ரக குச்சிகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளனர். விவசாய ஆலோசனை கூட்டங்களை நடத்தி வருகின்றனர். விரைவில் நிதி

ஒதுக்கீடுகள் பெற்று,முழு வீச்சில் ஆராய்ச்சி நிலையம் செயல்படத் துவங்கும் என பேராசிரியர் சுப்பையா தெரிவித்தார்.

**விதைகளை இருப்பு வைக்க "டிரம்' சப்ளை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,22:07 IST

கம்பம் : விதைகள் இருப்பு வைத்துக் கொள்ள விவசாயிகளுக்கு விதை கொள் கலன் எனப்படும் பிளாஸ்டிக் டிரம்கள் விவசாயத்துறை மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 225 லிட்டர் கொள்ளளவு கொண்ட இவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. விதை கிராமம் திட்டத்தின் கீழ் விதைகள் மற்றும் நெல் ஆகியவற்றை இருப்பு வைத்துக் கொள்ள பிளாஸ்டிக் டிரம் விற்பனை செய்யப்படுகிறது. 225 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிரம் ஒன்றின் விலை 750 ரூபாய். ஆதிதிராவிடருக்கு 237 ரூபாயும், மற்றவர்களுக்கு 180 ரூபாயும் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயி 8 டிரம்கள் வரை வாங்கலாம். கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் (பொ) ராமராஜ் கூறுகையில், " கம்பம் அலுவலகத்திற்கு ஆயிரத்து 136 டிரம்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. தேவைப்படுவோர் கம்பம் விவசாயத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்'என்றார்.

**செய்யூரில் மழை: வேர்க்கடலை பயிர்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 26,2011,23:29 IST

செய்யூர் : செய்யூர் தாலுகாவில், கோடை மழையால், வேர்க்கடலை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. செய்யூர் பகுதியில் மழை அதிகமாக பெய்ததால், சில தினங்களுக்கு முன், உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால், உப்பு உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்பிற்குள்ளாயினர். நேற்று முன்தினம் மாலை முதல், இரவு வரை, பலத்த மழை பெய்ததால், செய்யூர் தாலுகாவில், பல்வேறு கிராமங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த வேர்க்கடலை பயிர்கள், முளைவிடத் துவங்கிவிட்டன. வேர்க்கடலை அறுவடை செய்தவர்கள், அவற்றை வெயிலில் காயவைக்க முடியாமல், தார்பாயால் மூடி வைத்துள்ளனர். மழை தொடர்ந்தால், அவையும் முளைவிடத் துவங்கி முதலுக்கே மோசமாகிவிடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர் .

## இலக்குக்கு அதிகமாக நெல் கொள்முதல் செய்து சாதனை இந்த ஆண்டு கொள்முதல் 20 லட்சம் டன்னை தாண்டும்

*சென்னை, ஏப்.27–*

*இலக்குக்கு அதிகமாக நெல் கொள்முதல் செய்து உணவுத்துறை சாதனை படைத்துள்ளது. இந்த ஆண்டு கொள்முதல் 20 லட்சம் டன்னை தாண்டும்.*

*நேரடி நெல் கொள்முதல் மையம்*

*தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் நேரடி நெல் கொள்முதல் மையங்களை அமைத்து நெல் கொள்முதல் செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் வரை இந்த கொள்முதல் நடைபெறும்.*

*இந்த ஆண்டு (2010–2011) 1421 நேரடி நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டன. தற்போது 625 மையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நெல் சாகுபடி செய்த விவசாயிகள் தங்கள் வயலில் அறுவடை செய்த நெல்லை மூடைகளாக கட்டி இந்த மையங்களுக்கு எடுத்து வந்து விற்று வருகின்றனர். நெல் மூடைகளை எடை போட்டு அதற்கான பணம் உடனடியாக தரப்படுகிறது.*

*இலக்கை விஞ்சி சாதனை*

*சாதாரண நெல் டன் ஒன்றுக்கு (ஒரு டன் என்பது ஆயிரம் கிலோ ஆகும்) மத்திய அரசு ஆயிரம் ரூபாயும், தமிழக அரசு ஊக்கத்தொகையாக 50 ரூபாயும் கொடுக்கிறது. அதன்படி ஒரு டன் சாதாரண ரக நெல்லுக்கு ரூ.1,050 வழங்கப்படுகின்றது. முதல்தர நெல்லுக்கு மத்திய அரசு ரூ.1,030–ம், மாநில அரசு ஊக்கத்தொகையாக ரூ.70–ம் கொடுக்கின்றன. அதன்படி ஒரு டன் முதல்தர நெல்லுக்கு ரூ.1,100 கிடைக்கிறது.*

*இந்த ஆண்டு 16 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 25–ந் தேதி வரை 17 லட்சத்து 90 ஆயிரத்து 249 டன் நெல் கொள்முதல் செய்து உணவுத்துறை சாதனை படைத்துள்ளது. தற்போது தினமும் சராசரியாக 5 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த ஆண்டு (வரும் செப்டம்பர் மாதம் வரை) நெல் கொள்முதல் 20 லட்சம் டன்னை*

*சர்வசாதாரணமாக தாண்டிவிடும். ஏனென்றால், இன்னும் 5 மாதங்கள் இருப்பதால் நெல் கொள்முதல் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*ரூ.1,900 கோடி*

*நேரடி கொள்முதல் மையங்களில் நெல்லை விற்பனை செய்த விவசாயிகளுக்கு கடந்த 25–ந் தேதி வரை ரூ.1,900 கோடி ரொக்கமாக வழங்கப்பட்டு உள்ளது. கைமேல காசு என்பது போல நெல் கொள்முதல் மையங்களில் நெல்லை விற்றதும் உடனடியாக ரொக்கப்பணம் கைக்கு வந்து சேர்வதால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.*

*கடந்த ஆண்டு (2009–2010) 18 லட்சத்து 23 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 2005–2006–ம் ஆண்டு 13,81,570 டன்னும், 2006–2007–ம் ஆண்டு 16,07,803 டன்னும், 2007– 2008–ம் ஆண்டு 14,49,464 டன்னும், 2008–2009–ம் ஆண்டு 17,92,816 டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

## உற்பத்தியைப் பொறுத்து சர்க்கரை ஏற்றுமதியை அதிகரிக்க அரசு முடிவு




*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உற்பத்தியைப் பொறுத்து சர்க்கரை ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. சர்க்கரை உற்பத்தி குறித்த சாதகமான மதிப்பீடுகளால், அண்மையில் கட்டுப்பாடற்ற வகையில் ஐந்து லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) பிப்ரவரி 15 வரையிலான காலத்தில் இந்திய ஆலைகள் 2.18 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 1.76 கோடி டன்னாக இருந்தது.*

*நடப்பு பருவத்தில் நம் நாட்டில் 2.45 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என*

மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் தேவைப்பாடு 2.20 கோடி டன் அளவிற்கே இருக்கும் என்பதால் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு சர்க்கரை உபரியாக இருக்கும். இந்தியாவில் கரும்பு உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் உத்தரபிரதேசம் உள்ளது.

உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியா, நடப்பு பருவத்தில் 8 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய இயலும் என மதிப்பீடு செய்துள்ளது.

தினகரன்

**2.6 கோடி டன் நெல் கொள்முதல்**

பதிவு செய்த நாள் 4/27/2011 3:01:12 AM



புதுடெல்லி: கடந்த 2010&11ம் ஆண்டின் கரீப் பருவத்தில் 2.6 கோடி டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. நாட்டின் பல பகுதிகளில் பல்வேறு அரசு அமைப்புகள் மூலம் நேற்று முன்தினம் வரை 2.6 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

அதில் அதிகபட்சமாக பஞ்சாப்பில் மட்டும் 1.23 கோடி டன்னும், சத்தீஸ்கரில் 51.13 லட்சம் டன், அரியானாவில் 24.82 லட்சம் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் 2011&12ம் ஆண்டின் ரபி பருவத்தில் கோதுமை கொள்முதலும் தீவிரமடைந்துள்ளது. நேற்று முன்தினம் வரை 1.11 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.